சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**19 / 2015**

வாதி / பிரதிவாதி **வா.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **12.11.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மிதுன் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் கடவூர் IOB வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கணக்கு எண்.649600001 என்கின்ற கடனை யார் பெற்றிருந்தார் என்றால் மாமுண்டி கவுண்டர் மற்றும் வீராச்சாமி ஆகியோர்கள் கடன் பெற்றிருந்தார்கள். மேற்படி கடனானது எதற்காக பெறப்பட்டது என்றால் டிராக்டர் வாங்குவதற்காக பெறப்பட்டது. அதற்கான கடன் தொகை எவ்வளவு என்றால் ரூ.2,07,000/-. தேதி என்னவென்றால் 10.10.1996. மேற்படி மாமுண்டி கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அடமானம் வைத்து தான் மேற்படி கடனை பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு மாமுண்டி கவுண்டர் எவ்வளவு தொகை தற்போது செலுத்த வேண்டும் என்றால் ரூ.30,85,000/- நிலுவையில் உள்ளது. மாமுண்டி கவுண்டர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை இறந்துபோய்விட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மேற்படி வங்கியில் எந்த ஆண்டில் பணியில் சேர்ந்தேன் என்றால் 2024ம் ஆண்டு மேற்படி வங்கியில் பணியில் சேர்ந்தேன். மேற்படி வீராசாமி மற்றும் மாமுண்டி கவுண்டர் கடன் வங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால்சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் கூறுகிறேன். மேற்படி கடனானது விவசாய அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு ஏதேனும் மேற்படியார்களின் உரிமை மூலத்தைக்கொடுத்து கடன் பெற்றுள்ளார்களா என்றால் உரிமை மூலத்தை கொடுத்து அதனை (simple mortage) சாதாரண அடமானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எங்களது வங்கியில் வாங்கப்பட்டதாக கூறக்கூடிய கடனானது எத்தனை ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்தவேண்டும் என்றால் 7 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்தப்படவேண்டும். மேற்படி 7 ஆண்டுகளுக்குள் செலுத்தவில்லை என்றால் அதனை வசூலிக்க எவ்வளவு ஆண்டு கால அவகாசம் என்றால் அதற்கு கால அவகாசம்

இல்லை, அது வராகடனாக உள்ளது. வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்தாவிட்டால் வங்கியின் மூலமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பது சட்டப்படியான நடைமுறை தான். விவசாய கடனை பொறுத்தவரை சூழ்நிலையை கருத்தில் கொண்டு மத்திய, மாநில அரசுகள் மேற்படி கடன்களை தள்ளுபடி செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணையில் சொன்ன கணக்கு எண்ணை பொறுத்து மேற்படி கடனாளிகளிடம் இருந்து தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடனானது சட்டப்படியாக வசூலிக்கப்பட இயலாமல் காலவதியாக ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி காலவதியானாலும் தரப்பினர்கள் விருப்பப்பட்டால் வசூல் செய்யும்பொருட்டு இந்த கணக்கு வராகடன் பட்டியலில் சேர்ந்துள்ளோம் என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.12 18:41:43 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.